14.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது ஷெரிப் | | |
| த/பெ | மஜித் | | |
| கிராமம் | டி.எடைப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணைநல்லூர் | வயது | 69 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கில ் இறந்துபோன அப்துல் ஜாபரை என்பவரை தெரியும். எனக்கு அ.சா.1 ஷம்சுதின் என்பவரையும் தெரியும். நான் எங்கள் ஊரில் நானும் ஒரு நாட்டாமை ஆவேன். இந்த வழக்கு சம்மந்தமாக சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 10 .30 மணியளவில் நான் நிலத்தில் இருந்தபோது அப்துல் ஜாபர் எனக்கு போன் செய்து அவர் நம்ம ஊர் காலனி மாரியம்மன் கோவில் அருகில் வா என்று கூறினார். நான் போனேன். நான் போகும் போது அங்கு அப்துல் ஜாபர், ரங்கசாமி, ரங்கசாமியின் மகன்கள் மோகன், ரவி, கண்ணன், குப்புசாமி மற்றும் நாட்டாமை பாவாடை மற்றும் சிலர் அங்கு இருந்தார்கள். அவரை நான் எஸ்.ஐ என்று தான் கூப்பிடுவேன். என்ன எஸ்.ஐ கூப்பிட்டீர்கள் என்று கேட்டேன். இதற்கு முதல் நாள் முதலூர் கிராமத்தில் நான் நிலத்திற்கு வேலைக்கு ஆள் கூப்பிட்டிருந்தேன் வரவில்லை. அதை பார்க்க நான் முதலூர் சென்றிருந்தேன். அப்போது கண்ணதாசன் வீட்டின் எதிரில் மோகனின் கார் நின்று கொண்டிருந்தது. அங்கு மோகன், ரவி, அவரது அக்கா செல்வி, செல்வியின் கணவர் முனியன், செல்வியின் மகன் (பெயர்

தெரியவில்லை) இவர்கள் எல்லாம் இருந்தார்கள். ஒரு தகராறு நடந்தது. இதற்கு முன்பு கண்ணதாசன் மகனும், செல்வியின் மகனும், படிக்கிற இடத்தில் தகராறு செய்துகொண்டது சம்மந்தமாக இங்கும் பிரச்சனை நடந்துகொண்டிருந்தது. அப்துல் ஜாபர் மோகனை பார்த்து இரு எதாவது இருந்தாலும் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். மோகன் என்னை பார்த்து உங்களுக்கு ( அப்துல் ஜாபரை) இங்கு வேலை இல்லை என்று கூறினார். இது தான் நடந்தது என்று அப்துல் ஜாபர் என்னிடம் சொன்னார். இதில் என்னப்பா என் தரப்பில் தப்பு உள்ளது என்று அப்துல் ஜாபர் என்னிடம் கேட்டார். நீங்கள் ஒரு நாட்டாமை இதற்கு பதில் சொல்லுங்கள் என்று சொன்னார். நான் மோகனின் அப்பா ரங்கசாமியிடம் நாம் எல்லாம் ஒரு வயதுகாரர்கள் நாம் எப்படி பழகினோம் என்று இளம் வயதுகாரார்களுக்கு தெரியாது என்று சொன்னேன். நாம் பழகியது போலவே உங்கள் பிள்ளைகளுக்கும் விவரம் சொல்லுமாறு அவரிடம் சொன்னேன். அப்போது அப்துல் ஜாபர் அங்கிருந்து புறப்பட்டு சிறிது தூரம் சென்று நான் நினைச்சா உன் இரண்டு லாரியும் மணல் அடிக்காமல் தடுத்துவிடுவேன் என்று கூறினார். அதற்கு ரவி அப்பாசின் கையை பிடித்து நீ இரண்டு வண்டியை பிடித்துகொடுத்தால் நான் இன்னும் மேலும் இரண்டு வண்டி வாங்குவேன் என்று சொன்னார். நான் அங்கும் சொன்று இருவரையும் மறித்து புத்திமதி சொல்லி அனுப்பினேன். அதன் பிறகு அவர்அவர் திரும்பி சென்றுவிட்டார்கள். அந்த சம்பவத்திற்கு ஒரு நாள் கழித்து காலை 10 மணியளவில் கண்ணன் மகன் வீரன் என்பவர் என் வீட்டிற்கே வந்து அப்துல் ஜாபர் வீட்டில் ஏற்கனவே நடந்த சம்பவம் குறித்து பஞ்சாயத்து பேச நம்ம காலனி நாட்டாமை பாவாடை, ரங்கசாமி, ரங்கசாமியின் மகன்கன் மோகன், ரவி, கண்ணன், குப்புசாமி மற்றும் சிலர் இருப்பதாகவும் உங்களை வரசொன்னார்கள் என்றும் கூறினார். நான் போனேன். அங்கு அவர்கள் எல்லாம் இருந்தார்கள். அப்போது ரங்கசாமி நான் தவறு செய்திருந்தாலும், என் மகன்கள் தவறு செய்திருந்தாலும் நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் என்று எங்கள் முன்னிலையில் சொன்னார்கள். அப்துல் ஜாபர் அப்போது இனி இதுபோன்று நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன் பிறகு ஒன்றும் நடைபெறவில்லை. அதற்கு பிறகு அனைவரும் சென்றுவிட்டார்கள். அதன் பிறகு சுமார் 1 மாதம் கழித்து நாங்கள் பஞ்சாயத்து பேசிய அதே வீட்டில் வைத்து தான் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக என்னை காவல் துறையினார் விசாரணை செய்தார்கள்.

(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மோகன், ரவி ஆகியோர் அப்துல் ஜாபாரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு போகும் போது மோகனும், ரவியும், என்னிடம் அந்த ஆள்கிட்ட எங்களை மன்னிப்பு கேட்கவைத்துவிட்டீர்கள் அவரை நாங்கள் சும்மா விடமாட்டோம் என்று எச்சரித்துவிட்டு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுகொண்டதன் பேரில் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விசயங்களையும் அப்துல் ஜாபர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் முதலூரில் நடந்த விசயம் மட்டும் அப்துல் ஜாபருக்கு தான் தெரியும். என்னை மாரியம்மன் கோவிலுக்கு வரசொன்ன விவரத்தை நான் காவல் துறையின் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அப்துல் ஜாபர் ஆள்கூப்பிட்டு வரபோனார் என்ற விவரத்தையாவது நான் காவல் துறையின் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. கண்ணன் மகன் வீரன் இரண்டு நாட்கள் கழித்து பஞ்சாயத்திற்கு என்னை கூப்பிட்டார் என்ற விவரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை. நான் எனது இரண்டு லாரியை மறித்தால் இன்னும் இரண்டு லாரி வாங்கிவிடுவேன் என்று ரவி கூறிய விவரத்தை காவல் துறை விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்து முடிந்த பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் வாய்ப்பு முடிக்கப்பட்டது.**